©
GOVERNMENT OF TAMIL NADU
2015

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 76A] சென்னை, செவ்வாய்கிழமை, மார்ச் 31, 2015
பங்குனி 17, ஜய, திருவள்ளுவர் ஆண்டு-2046

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2015–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2015**

**2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 16/2003.

**2.** 2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தின் 4–ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், (a) எனும் கூறில், “2011–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31–ஆம் தேதி வாக்கில் ஐந்து விழுக்காட்டளவிற்கு மேற்படாமல் குறைத்து வந்து 2011–2012 ஆம் ஆண்டு வாக்கில் வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்குவதோடு” என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, “2016–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31–ஆம் தேதி வாக்கில் ஐந்து விழுக்காட்டளவிற்கு மேற்படாமல் குறைத்து வந்து 2016–2017 ஆம் ஆண்டு வாக்கில் வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்குவதோடு” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**<u>நோக்க—காரண விளக்கவுரை</u>**

வருவாய்ப் பற்றாக்குறையை நீக்குவதற்கான கால அளவை நீட்டிப்பு செய்வதன் பொருட்டு, நிர்ணயிக்கப்பட்ட நிதி மேலாண்மை இலக்குகளைப் பராமரித்து, ஒட்டு மொத்த நோக்கங்களை அடைவதற்காக, 2003—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தினைத் (தமிழ்நாடு சட்டம் 16/2003) திருத்தம் செய்வதெனக் கருதப்பட்டுள்ளது.

**2.** இச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**ஓ. பன்னீர்செல்வம்,**
*முதலமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.